## துண்டுப்பிரதி Tracts (1)

அன்புள்ள சகோதர சகோதரிகளுக்கு ஸ்தோத்திரம்:
கிறிஸ்துவே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார். (1 கொரிந்தியர் 1:31)

கிறிஸ்துவைப் பற்றிய துண்டுப்பிரதியை (Tracts), நாம் ஒருவருக்கு கொடுக்கும்போது,
அவர்கள் விருப்பத்தோடு ஏற்றுக் கொள்ளலாம்.....
மறுக்கலாம்.....
விருப்பு வெறுப்பு இல்லாமல் வாங்கிக்கொள்ளலாம்.....

பிரபஞ்சத்தின் ஞானம்...
இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானம்....,
இவ்வுலகத்தின் ஞானம்.....
மனுஷனுடைய ஞானம்.... (1 கொரிந்தியர் 2:5, 2.6 & 3:19)
இவைகளால் ஆட்கொள்ளப்பட்ட இருதயம்......
கிறிஸ்துவின் மகிமையை அறிந்துகொள்வதற்கு மறுக்கிறது.

முன்பு...இதே சூழ்நிலையில் இருந்த நான்,
இன்று, கிறிஸ்துவின் கிருபையினாலே இரட்சிப்பைப் பெற்ற பிறகு......
கிறிஸ்துவின் மகிமையை அறியாமலும்
அறிந்துகொள்ள விரும்பாமலும் இருக்கிற மக்களை, நினைக்கும்போது,......
எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது;
(ரோமர்/Romans 9:1)

இவர்களுக்காக ஜெபிக்கவும் தொடர்ந்து பிரயாசப்படவும் கர்த்தருக்குள் வாஞ்கிக்கிறேன்....

ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும்
உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். (பிலிப்பியர்/Philippians 2:13)

கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல,
இது தேவனுடைய ஈவு;
ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;
(எபேசியர்/Ephesians 2:8-9)

இரட்சிப்பைப் பெற்ற பிறகு.....
நம்முடைய நற்கிரியைகளினால் கிறிஸ்துவுக்காக பிரயாசப்படுவோம்....
....நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய
செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை
ஆயத்தம்பண்ணியிருக்கிறார். (எபேசியர்/Ephesians 2:10)

ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம்
விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும்,
கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.
(1 கொரிந்தியர்/1 Corinthians 15:58)

தொடர்ந்தும் சிந்திப்போம், ஜெபிப்போம், பிரயாசப்படுவோம்.
கர்த்தர் நம் அனைவரையும் ஆட்கொண்டு ஆசீர்வதிப்பாராக.
ஆமென்